புதினப்பத்திரிகையாகப்பதிவு செய்யப்பட்டது.

| பத்திரிகை விகிதம். | # தமிழ்நேசன் | விளம்பர விகிதம் |
|---|---|---|
| வருட சந்தா ரூபா 2-00 தனிப் பிரதி சதம் 3. | "தேறற்க யாரையுந் தேர்ந்தபிற் றேறுக தேறும் பொருள்" | விளம்பர விகிதங்களுக்கு மனேஜருக்கு எழுதவும் |

## திங்கட்கிழமைதோறும் வெளிவருவது

**மலர் 1 பவ ௵ சித்திரை ௴ 11-ந் ௳ 23-4-34 இதழ் 1**

# அரசியற் சபை
# அங்கத்தவர் தெரிவு.

## வடமராட்சிப் பகுதி.

நிகழும் பவ ௵ சித்திரை ௴ 14-ந் ௳ புதன்கிழமை 23-4-34

**பிற்பகல் 6 மணியளவில்**

வல்லுவெட்டித்துறை சிதம்பர வித்தியாசாலையில்

கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைக் கௌரவ வித்தியாவிநோதரும்

ஷை கலாசாலையில் சட்டசாஸ்திரத்தில் கௌரவம்பெற்றவரும்,

இன்னும் லண்டன்மாநகரத்தில்பாரிஸ்டர் பட்டம்கௌரவத்துடன்பெற்றவரும்

ஆகிய

## திருவாளர் ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களை

வடமராட்சிப் பகுதிக்கு அரசியற்சபை அங்கத்தவராகத் தெரிவு செய்தற்காக இந்தப்பகுதி வாக்காளரது மகாசபை ஒன்று கூடும். அந்தருணம் இதற்குச்சார்பானவர்கள் யாவரையும் வருமாறு வேண்டுகின்றோம்-

இங்ஙனம்

வல்லுவெட்டித்துறை

மு. விசுவலிங்கம்
மா. இராசா
த. சரவணமுத்து
M. விசுவலிங்கம்
த. கு. செல்லமாணிக்கம்
சொ. செ. துரைசாமிப்பிள்ளை
K. Kandappillay
த. பொன்னுச்சாமி
சி. வயிரமுத்து

சு. பொன்னம்பலம்
வி. செல்வவிநாயகம்
பொ. ஐயாமுத்து
வ. பாலகிருஷ்ணன்
க. இராசமாணிக்கம்
அ. அருணாசலம்
க. சுப்பிரமணியம்
ஐ. நடராஜா

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

# தமிழ்நேசன்

பவ ஆண்டு சித்திரை மீ 11-ந் உ


## எமது கடன்

தமிழர்களாகிய நாங்கள் மற்றைய சாதியாரிலும் பார்க்க விவேகத்தாலும் அறிவாலும் முயற்சியாலுஞ் சிறந்து விளங்குகிறோம். எங்களுக்குள்ளே பெருஞ்செல்வரேனும் பெரும் மிடியுடையவர்களேனு மில்லை. ஐரோப்பா அமெரிக்கா முதலிய இடங்களிலே செல்வமெல்லாம் சிலரிலே சேர்ந்து நிற்கப்பெருந்தொகையினர் வறியவர்களாக இருத்தலாலே செல்வருக்கும் வறியவருக்கும் நித்தியபோர் நடந்து வருகின்றது. இங்கே இந்தப்போருக்கு இடமில்லை. இதனாலே இங்குள்ள தமிழர்கள் ஒற்றுமையாக வாழ்வதற்கு இயல்பான தடைகள் ஒன்றுமில்லை. சுயநலம், பொறாமை எரிச்சல் ஆங்காரம் முதலிய குணங்கள் வந்து பெரியவர்களைத் தாவுதலினாலே அவர்கள் ஒருவரோடொருவர் பொருந்திக் கொண்டு ஊருக்கு அநர்த்தம் பண்ணுவதுண்டு. ஆயினும் ஊரவர்கள் தங்களுடைய நிலைமை இப்படிப்பட்டதென்பதையும் தங்களை நன்னிலைப்படுத்தும் வழிகள் இவையென்பதையும் அறிவார்களானால் தங்கள் காரியத்தைத் தாங்கள் செம்மையாகப் பார்த்துக்கொள்ளுவார்கள். குதும்பு, புரட்டும், உருட்டும் பெரியவர்களிலே உள்ளன அன்றிப் பொதுவான சனங்களில் இல்லை. தொழில், செல்வம், அரசியல் நிலைகல்வி ஆகிய இவைகளை நாங்கள் எப்படி நயப்படுத்தலாம் என்பதே இப்பத்திரிகையின் நோக்கமாம்.

யாழ்ப்பாணத்திலே இப்போது போதிய செல்வமிருந்தாலும் இனிமேலும் இந்தச் செல்வமிருக்கத்தக்கதாக வழி தேடுவது அவசியம். எங்கள் செல்வத்திற்பெரும்பகுதி சிங்கப்பூர் முதலிய இடங்களிலே எம்மவர்கள் சம்பாதித்தவைகளேயாம். இப்போது யாழ்ப்பாணத்தார் அங்கே முயற்சி பெற இயலாது. புகையிலையாலும் சுருட்டினாலும் பெரும் பொருள் வந்தது. இந்த வியாபாரங்கள் வீழ்ந்து போயின. இவைகளுக்குப் பதிலாக வேறுவழிகள் பொருள் சம்பாதிப்பதற்காக ஆராய்ந்தறிய வேண்டும், இதற்கு அரசினருடைய துணை அவசியம் வேண்டும். இந்தத் துணையைப் பெறுதற்கு நம்பிக்கையானவர்களாயும், தேசநன்மையிலேயே கண்ணுள்ளவர்களாயும், எடுத்த காரியத்தைச் சாதிக்கத் தக்கவிடா முயற்சியுடையவர்களுமான பெரியோர்களை அரசியற் சபைக்கனுப்ப வேண்டும்.

பொருளை நிலைக்கப் பண்ணுதற்குச் சுகமான வழி செலவைக் குறைக்கலாம். இதற்காக ஊரிலே அநேக இயக்கங்கள் உண்டாக வேண்டும். வீண்வழக்காடிப் பொருளைச் சேதப்பண்ணும் பழக்கம் அகலவேண்டும். எங்கள் கல்விமுறை அறிவையேற்றுதற்கு மேயன்றித் தொழில் செய்வதற்கு உதவியாகவும் இருக்கவேண்டும், பள்ளிக்கூடப்பிள்ளைகளேயன்றி வயதில் முதிர்ந்தோரும் தங்களுடைய அறிவை வளர்ப்பதற்குவழி தேட வேண்டும். இதற்கு ஒவ்வொரு கிராமப் பிரிவிலும் இராப்பள்ளிக்கூடங்களேனும், அறிவுவளர்ச்சிச் சங்கங்களேனும், வாசிகசாலைகளேனும், ஏற்படுத்தப் படவேண்டும்.

இப்படியாகத் தமிழராகிய நாங்கள் சுகமாகவும் சமாதானமாகவும் நல்லொழுக்க முடையவர்களாகவும் வாழ்தற்கு வேண்டிய சாதனங்களைப் பற்றிப்பேசுவதும் ஊர்ப்புதினங்கள் நல்லறிவுச்சுடர் கொளுத்தும் வியாசங்களை எழுதுவதும் இவைபோல் வனபிறவும் இப்பத்திரிகையின் முயற்சிகளாகும்.

### வீடுகள் தகனம்

தங்கேள், ஏப்ரல், 18—

ல[illegible]கிராம் என்ற கிராமத்தில் இடி விபத்து ஏற்பட்டதால் இருவர் மாண்டனர்; ஒருவருக்குக்காயமேற்பட்டது. இரு வீடுகள் தீடபிடித்து சாம்பலாயின.

## 9 பேர்கள் மரணம்

விருதுநகர், ஏப்ரல், 19—

நேற்று மத்தியானம் 1-15 மணிக்கு 4 பேர்கள் பருத்திக்காட்டிலிருந்து விருதுநகருக்குக் கிழக்கே 20 மைல் தூரத்திலுள்ள கொப்புச்சித்தபட்டி கிராமத்திற்கு திரும்பி வந்து கொண்டிருக்கையில் இடி விழுந்ததால் மாண்டனர்.

திருச்சுழியில் ஓர் இடி விழுந்ததால் ஒரு வீடு எரிந்ததுடன், 3பேர்கள் மாண்டனர்.

சமீபத்தில் இப்பக்கத்தில் இடி விழுந்து பலர் மாண்டிருப்பது பரிதாபகரமான விஷயமாகும்.

## மண்டபம் இடிந்து விழுந்தது.

### 75பேர்களுக்கு விபத்து

காலி. —

காலியினின்றும் சுமார் 12 மைல் தூரத்தில் பரகொடை என்னும் ஓர் கிராமம் உளது. அக்கிராமத்திலுள்ள பௌத்தாலயத்திலுள்ள மாடியில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சுமார் 500 பேர்கள் மண்டபத்திற் குழுமியிருந்தனர். அது சமயம் எதிர்பாராதவிதமாக மண்டபம் இடிந்து விழவே சுமார் 100 பேர்கள் கீழே விழுந்துவிட்டனர். அவர்களில் 75 பேர்களுக்கு கோரமானவிபத்து ஏற்பட்டிருக்கின்றது. 10 நபர்கள் உடனே காலி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டனர். மற்றவர்களை ஆயுர்வேத வைத்தியர்கள் சிகிச்சை செய்து வருகின்றனர்.

### ரயிலைவிழ்க்கச் சதி

புச்சாரஸ்ட், ஏப் 2.

ருமேனியாவில் சிம்பிளன்-ஓரியண்ட் எக்ஸ்பிரஸ் ரயிலைக் கவிழ்க்க நடைபெற்றமுயற்சி விபத்து நடைபெறப்போகும் சமயம் நல்ல வேளையாகக் கண்டு பிடிக்கப்பட்டது. கிரேயோவா என்னுமிடத்தில் அநேககஜதூரம் தண்டவாளங்களிலுள்ள ஆணிகள் கழற்றப்பட்டிருந்தன.

அவ்விடத்தில் ரயில்வருவதற்கு 10 நிமிஷ நேரம் இருக்கும்போது இச்சதி கண்டு பிடிக்கப்பட்டது. தூரத்தில் வரும் ரயிலை நிறுத்த ரயில்வே சிப்பந்திகள் மிகக்கஷ்டப்பட்டு முடிவில் வெற்றியுற்றனர்.

# அரசாங்கசபை ஸ்தான அபேட்சகரின்

# அல்லோல கல்லோலம்.

## அறியாமையும் அபிமானக் குழப்பமும்

## அநாமதேய அறிவிப்பு நோட்டிஸ்

# அக்கிராசனத்திற்கு அருகரல்லாதவர்

# பாண்டுவாத்தியமும் பார்க்கவந்தாரும்

## வயல் வெளியிற் கூட்டமும் வாக்காளர் பதின்மரும்

# படுபொய்யும் பகட்டுரையும்

வடமராட்சிப்பகுதி அங்கத்தவரைத் தெரிவுசெய்யும் நோக்கத்துடன் ஒருகூட்டமொன்று கரவெட்டியில் கூட்டுதற்கு 20.4.34 லில் நோட்டீஸ் ஒன்று புறப்பட்டது யாவரும் அறிந்ததொன்றாகும், பத்மநாதன் அவர்களைத் தெரியவேணுமென்பதே அதன்நோக்கமாகும. அதன்படிவு கீழ்வருமாறு, முதலாவது, நோட்டீஸ்ஒருவரின்ஆதரவுமின்றி அநாமதேயத்தோடுவெளிப்பட்டமையின் சனங்கள்அது வீணரின் கூட்டமெனவெறுத்துத் தள்ளினர்' இரண்டாவது அறியாமையின் மேலீட்டினல் கற்றோரையும் தூஷணமொழியில்இகழ்ந்து. மூர்க்கரும்முதலேயும் கொண்டது விடா,, என்றதுபோல்கற்றோர் சிலரையும்மற்கடச்சேட்டை புரிந்து தம்பிறப்பை நிறுவி ஸ்ரீபதமநாதன் அவர்களை அவமானத்துக்குள் ஆக்கியது' துக்கம் துக்கம்!

மூன்றாவது வடமராட்சிக்கண் கல்வியிலும் பெருமையிலும் வாக்குச்சாதுரியத்திலும் தேர்ந்த மேதாவிகள் அநேகர் இருந்தும அவர்களில்ஒருவரும தெரியபடாது அந்நியஊரால் அக்கிராசனமுறை இன்னதென்று கூடத் தெரியாத ஸ்ரீ. சுப்பிரமணியம் (இன்சூரன்ஸ் கொம்பனிக்குஆள் சேர்ப்பவர்) என்பவரை அழைத்து வநது ஆசனத்திருத்தி அகமகிழ்ந்தது வெட்கம்! வெட்கம்!!

நாலாவது, பாண்டுவாத்தியத்தைக்கேட்டிராத சிலர் என்ன வோபுதிய தொனியொன்றுகேட்கிறதே, இதுஎன்னபார்ப்போமென்று வேடிக்கைபார்க்கக்கூடினர். "ஸ்ரீ பத்மநாதன் அவர்களைத் தெரிவுசெய்யும் கூட்டம என்று சிலர்சொல்ல அதனைச் செவிகொண்டோர இவாகட்கு வெறும்பித்தென்று கூறிவிட்டு நோக்கியது கூட்டத்தைக் கூட்டியோர்க்கு ஏக்கத்தைக் கொடுத்தது.

ஐந்தாவது. கரவெட்டியில் எத்தனையோ பாடசாலைகள்' வேறுதகுந்த இடங்கள் இருந்தும் அவைகளில இடங்கிடைக்கப் பெறாது வயற் கரையோரத்தில் வாக்ககாளர் பத்துப் பேரோடுகூட்டமும. நாலாப க்கத்திலும

மறுப்பாளரின் கூக்குரலுமாய் கூட்டம சிறிதுபொழுதில்வறிதே முடிந்தது.

ஆறாவது ஸ்ரீ. பத்மநாதன்அவர்கள் அரசாங்கசபையில் உத்தம தேசாதிபதி யவர்களின் பணத்தைத் தானே குறைத்ததாகவும் இன்னும இவைபோன்றபலபிரட்டுரைகளைப் பிரட்டிக்கூறி அதற்காதாரமாக ஒருபெரும் அகராதிப் பொஸ்தகத்தையும் சபையோர்க்கு ஒற்றை ஒற்றையாகத் தட்டிக்காட்டியது அவரது செப்படிவித்தைத் திறமையை விளக்கியது.

## கள்ள நாணயம்

### உற்பத்தி

யாழ்ப்பாணம் சுண்டிக் குளிப்பகுதியைச்சேர்ந்த கந்தர் இளையதம்பி என்பவர் கள்ளநாணயம்உற்பத்தி செய்ததற்காக 1வருடச்சிறைத்தணடனே பெற்றார்.

## அரசியற்சபை அங்கத்தவர் தெரிவு

(1ம் பக்கத் தொடச்சி)

ச. க. திருச்சிற்றம்பலம்
சி. செல்லத்துரை
கு. மகாலிங்கம் Proctor
C. குழந்தவேலு அப்புக்காத்து
K. அருளம்பலம் கோவில் மனேச்சர்
திரு. அரு. சபாரத்தினம் கோவில் ஆதின கர்த்தர்
வ. இராமசாமி
சி. குமாரசாமி
க. திருச்சிற்றம்பலம்
செ. ரத்தினவடிவேலு
ச· கா-கந்தசாமி வையித்தியர்
ஆ. விசுவலிங்கம்
வி. ச. சேமசுந்தரம்
V. M. கந்தசாமி
P. Thankavelautham
K. S. தணிகாசலம்
பொ. இராசமாணிக்கம்
பொ. சதாசிவம்
கு. கிருஷ்ணசாமி
நா. தருமலிங்கம்
V. சந்திரசேகரம்

S. குழந்தவேலு
A. Ratnam
E. Navaratnam
E. ரகுநாதபிள்ளை
V. S. வெங்கடாசலம்
V. K. பொன்னுசாமி
P. நாகரத்தினம்
V. தங்கவேலு
பொ. மயிலேறும் பெருமாள்
S· நடராஜா
சி. அருணசலம்
க. அருணசலம்
ப. கனகசபை
V. சிவகுரு
ஆ. செல்லத்துரை
ஞா. தையல்பாகர் பாடசாலை மனேச்சர்
N. தருமலிங்கம்
தி. சீனிவாசகம்
வீ. இராசமாணிக்கம்
ஆ. சுப்பிரமணியம்
சோ. செ. சோமசுந்தரம்

# திருவாளர் ஸ்ரீ பத்மநாதன்

# கொழும்புக்குத் திரும்பிவிட்டார்

Printed and Published for the Proprietor at Thamilan Press 31, lst Cross Street Jaffna on 23 April 1933. by N. Rajah residing at Puloly South PointPedro

N Rajah